10.07.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண். 112 /2019 ) திரு. கர்ணன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணைதொடர்ச்சி -

1) வழக்கு சொத்து மந்தித்தோப்பு கிராமம் சர்வே எண்.121/6 ல் மொத்தம் 2 ஏக்கர் 58 செண்டு நிலம் இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி தரப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராது தாக்கல் செய்துள்ளதை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பாத்துள்ளேன். சர்வே எண்.121/6 ல் கண்ட 2 ஏக்கர் 58 செண்டில் கோமதிநாயகம் செட்டியார் என்பவர் 1 ஏக்கர் 31 செண்டு நிலத்தை பூமிதான இயக்கத்திற்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அது போக 1 ஏக்கர் 27 செண்டு உள்ளது என்றால் சரிதான். 1 ஏக்கர் செண்டு 27 காந்திமதிநாதனுக்குப் பாத்தியப்பட்ட 52 செண்டு போக தென்பக்கம் உள்ள 75 செண்டு நிலத்தை வெள்ளையன் என்பவர் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. வெள்ளையன் இறப்பிற்கு பின்னர் அவரது மகனான தேவசாயகம் அனுபவம் செய்து வந்து வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக கருப்பசாமி செட்டியார் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளாா என்றால் சர்வே எண்.121/6- ல் உள்ள 75 செண்டு நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று வா.சா.ஆ.2 ஐ பார்த்து சாட்சி கூறுகிறார். கருப்பசாமி செட்டியார் 07.04.1974 ல் வா.சா.ஆ.3 இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கருப்பசாமி செட்டியாரின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளார் என்றால் அதில் 5 நபர்கள் வாரிசுகளாக குறிப்பிட்டுள்ளார். அதில் வாரிசாக மாரியப்பன், நாகலட்சுமி, கணேசன், குமரேசன்,இராஜேஸ்வரி ஆகியோர்கள் வாரிசுகள். சர்வே எண்.121/6 பி கூட்டாக அனுபவம் செய்து வந்ததாக வா.சா.ஆ.5 பட்டா எண்.2045 தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த பட்டாவை கோட்டாட்சியர் முறைகேடாக வழங்கப்பட்டதாக சொல்லி ரத்து செய்துவிட்டார். கருப்பசாமி செட்டியாரின் வாரிசுகள் மாரியப்பன் நாகரத்தினம், குமரேசன், இராஜேஸ்வரி ஆகியோர்கள் தனது உடன்பிறந்த சகோததரான கணேசன் என்பவருக்கு வாய்மொழியாக கிரையம் செய்துகொடுத்தாக கட்சிசெய்துள்ளதாக பிராதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.121/6 பி, பட்டா எண்.2124 ல் கணேசன் பெயரில் வா.சா.ஆ.5 ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்,அது 2009 ல் கோட்டாட்சியர் விசாரணையில் அதை ரத்து செய்துள்ளார்.

2) கணேசன் 21.01.2008 ல் கிரையம் பாலகிருஷ்ணனுக்கு எழுதிக்கொடுத்தற்கான கிரைய ஆவணம் வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கிரைய ஆவணத்தின் படி பட்டா எண்.2159 ஆக ஏற்பட்டு வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது கோட்டாட்சியர் விசாரணையில் ரத்து செய்யப்பட்டுள்ளது. பாலகிருஷ்ணன் வாதி வேலுச்சாமிக்கு எழுதிக்கொடுத்தகிரைய ஆவணம் வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 28.05.2017 ல் இந்த இடம் எனக்குப் பாத்தியப்பட்டதென வாதிகளை இடைஞ்சல் செய்தாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் இடையூறு செய்ததாகசொல்லுவது உண்மையல்ல. நான இடையூறு செய்தேன் என்றும் பிரதிவாதிகள் பெயரில் வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். லெட்சுமியம்மாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிலஉடமை பதிவேட்டு திட்டத்தின் கீழ் ஏற்பட்டதை தவறாக பயன்படுத்தி லெட்சுமியம்மாள் 10.12.1996 ல் ரத்தினசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் நிலஉடமை பதிவேட்டு ஆவணத்தில் ஏற்பட்டுள்ளதாக சொல்லுவது தவறு, கிரையம் பெறப்பட்டது என்பது உண்மை. ரத்தினசாமி 20.01.1997 ல் பாலசுப்பிரமணியத்திற்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பாலசுப்பிரமணியன் 26.05.2004 அன்று ராஜ் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளாா என்றால் சரிதான். ராஜ் என்பவர் பவர் ஏஜெண்ட் நிலைமையில் எனது சகோதரர் பார்த்திபன்,எனது தாயாருக்கு 21.07.2004 ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன் பின்னர் எனது சகோதரர் எனது தாயாரிடமிருந்து 24.11.2011 ல் நன்கொடை ஆவணம் மூலம் எழுதி வாங்கியுள்ளார் என்றால சரிதான். மேற்படி கிரைய மற்றும் தானசெட்டில்மெண்ட் ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் எதுவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களின்படி எனது சகோதரருக்கு எந்தவித அனுபவமும் சித்திக்கதல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களை கட்டுப்படுத்தக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

3) வாதி அவரின் முன் பாத்தியஸ்தரிடமிருந்து 1966-லிருந்து முறையாக கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால சரியல்ல. இந்த வழக்கில் நான்

எதிர்கோரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. தீர்வை செலுத்தியுள்ளோம். அந்த தீர்வை ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை அனுபவம்செய்து வருவதாக சொல்லுவது பொய் என்றும் வாதி தான் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. நான் காவல் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். தூத்துக்குடி மாவட்டத்தில் 1999 ல் பணியாற்றியுள்ளேன். நான் எனது அதிகாரத்தை பயன்படுத்தி தபசில் சொத்திற்கு மோசடியாக எனது சகோதரர் பெயரில் பட்டா ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நிலஉடமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட தவறான பதிவை பயன்படுத்தி முன் பாத்தியஸ்தருக்கு ஆவணம் ஏற்பட்டுள்ளதன் அடிப்படையில் எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
10.07.2025.